26.04.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை (ஓ.எஸ்.எண்.119/2019) திரு.கருப்பசாமி.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

வா.சா.ஆ.2 நன்கொடை ஆவணத்தில் சொத்தின் சர்வே எண்.513/2 A1A1 நம்பர் நான்கு மால்கள் விவரத்தில் மங்களசாமி வீட்டிற்கும் வடக்கு, தென்வடல் தெருவுக்கும் மேற்கு, சிலோன் அகதிகளின் காலனிக்கு ஒதுக்கப்பட்டுள்ள புறம் போக்கு நிலத்திற்கு கிழக்கு, புறம்போக்கு நிலத்திற்கும் தெற்கு அவ்வாறு கண்டுள்ளது என்றால் 1984 ஆம் வருடத்தின்படி சரிதான். பிராது 2 ம்தபசில் சொத்தின் சர்வே எண்.513/2A1A1 ற்கு குறிப்பிடப்பட்டுள்ள எல்கைமால் கிழக்கு பக்கம் பஞ்சாயத்தால் அமைக்கப்பட்ட தென்வடல் வாறுகால் மற்றும் சிமெண்ட் ரோடு, மேற்கு கோவில்பிள்ளை மற்றும் பால்ராஜ் வீடு,வடக்கு பக்கம் பஞ்சாயத்தால் அமைக்கப்பட்ட கிழமேல் ரோடு,சுகாதார மைய்யம்,தெற்கு பக்கம் 1 வது தபசில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் 2019 ன் படி. பிராது 1 வது தபசில் சொத்து விவரத்தின் நான்கு மால் கிழக்கே பஞ்சாயத்தால் அமைக்கப்பட்ட தென்வடல் வாறுகால் தென்வடல் ரோடு, மேற்கே அழகம்மாள் வீடு, வடக்கே 2 ம்தபசில் சொத்து, தெற்கு பேச்சிமுத்து வீடு அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான் மேற்படி நான்கு மால்கள் விவரமும் 2019 ன்படி. பிராது 1 வது தபசில் சொத்து எத்தனை செண்டு என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் சுமார் 4 செண்டு இருக்கும். பிராது 2 வது தபசில் சொத்து விவரத்தில் செண்டு 3 உள்ள காலிமனை நிலமும், மற்றும் சுமார் 1 செண்டு அளவுக்கு மேல் உள்ள குப்பை போடும் இடமும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 செண்டுக்கு ஆவணம் வைத்துள்ளேன் பாக்கி உள்ள இடத்திற்கு 3 தலைமுறையாக அனுபவம்

செய்து வருகிறோம்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
26.04.2024.